***DEPOSITION OF WITNESS***
*(Chapter XXIII Code of Criminal Procedure)*
- - - - -

# *IN THE COURT OF SESSIONS, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.*

| | | |
|---|---|---|
| ***Case No.*** | : | ***SC No. 596 / 2018*** |
| ***Deposition of witness for*** | : | ***PW : 1*** |
| ***Name*** | : | **திரு. வைரவன்** |
| ***Father's Name*** | : | |
| ***Village*** | : | |
| ***Taluk*** | : | |
| ***Caste*** | : | |
| ***Calling*** | : | |
| ***Religion*** | : | |
| ***Age*** | : | |

*Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of* ***28.01.2025***

எதிரிகள் 1 முதல்3 மற்றும் 5,6 ஆஜர். எதிரி 4 இறப்பு.

**முதல் விசாரணை :**

நான் மேலூர் தாலுகா, அழகர்கோவில் ஆயத்தம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். எனக்கு 75 வயது ஆகிறது. ஆஜர் எதிரிகளைத் தெரியும். 1,2 எதிரிகளைத் தெரியும். அவர்களை சின்ன வயசில் பார்த்தது. தற்போது பல ஆண்டுகள் ஆகிவிட்டதால் எனக்கு அடையாளம் தெரியவில்லை. ஏனென்றால் ரொம்ப நாட்கள் ஆகிவிட்டது. 3,5,6 எதிரிகளைத் தெரியும். சாமிக்கண்ணு எனது அண்ணன் மருமகன். கல்யாணம் கட்டிக் கொடுத்தபோது தெரியும். 2 வது எதிரி துரையைத் தெரியும். அவர் எங்கள் ஊர்க்காரர் ஆவார். வழக்கில் இறந்துபோன 4 வது எதிரி ஜப்பான் என்ற அழகர் எனது மாமா

மகன் ஆவார். தற்போது நான் வேலை எதுவும் பார்க்கவில்லை. எனக்கு உடன் பிறந்தவர்கள் மொத்தம் 6 பேர். அதில் 3 ஆண், 3 பெண் ஆவார்கள். எனது அண்ணன் பெயர் வெள்ளைக்கண்ணு என்ற மலையாண்டி ஆவார், அவர் எனது நடு அண்ணன். எனது அண்ணன் வெள்ளைக்கண்ணு இறந்துவிட்டார். அவருக்கு 2 தாரங்கள். மூத்ததாரத்தின் பெயர் அழகி. அவர் இறந்துவிட்டார். வெள்ளையம்மாள் எனது அண்ணனின் இளைய தாரம் ஆவார். எனது அண்ணனின் மூத்ததாரம் அழகிக்கு தமிழ், சிந்து என்ற 2 பெண் குழந்தைகளும் பச்சைமுத்து என்ற ஆண்குழந்தையும், 2 வது தாரத்திற்கு பாய் என்ற பிள்ளையும் உள்ளார்கள். எனது அண்ணன் மகளை பிட்டர் கண்ணன் மகன் சாமிக்கண்ணு என்பவருக்குத்தான் கல்யாணம் செய்து கொடுத்தார்கள். வழக்கு சம்பவத்திற்கு 2,3 ஆண்டுகளுக்கு முன்பு, என் அண்ணன் மகளான தமிழ் என்ற பச்சையம்மாளை சாமிக்கண்ணுக்கு திருமணம் செய்து கொடுத்தோம். அவர்களுக்கு ஒரு ஆண் குழந்தையும் ஒரு பெண் குழந்தையும் இருந்தது. திருமணமாகி 2 வருடங்கள் கழித்து சாமிக்கண்ணு வெளிநாடு போகவேண்டும் என்று, பணம் கேட்டார்கள். நானும் என் அண்ணனும் சேர்ந்து எங்கள் இடத்தை வித்துக் கொடுத்து அவர் வெளிநாடு போனார். 2 வருடம் கழித்து என் அண்ணன் மகளை அவரது மாமியாரும், மாமனாரும் அவளை இருக்கவிடாமல் தொந்தரவு பண்ணியதாகச் சொன்னார். அவரிடம், வெளிநாடு போனவர் வரட்டும், பேசிக்கொள்ளலாம் என்று சமாதானப் படுத்தினோம். அவர்கள் கொடுமை தாங்காமல் என் அண்ணன் மகள், என் அண்ணன் வீட்டில் தான் இருந்து வந்தார். சாமிக்கண்ணு வெளிநாடு போய்விட்டு வந்து,

ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார். அந்த பெண்ணின் பெயர், ஊர் போன்ற விபரங்கள் பற்றி எனக்குத் தெரியும். என் அண்ணன் மகள் என் அண்ணன் வீட்டில் இருந்த போது, 1 வது எதிரி, என் அண்ணன் வீட்டை அடித்து உடைத்து சத்தம் போட்டார்கள். சாமிக்கண்ணு திருமணம் முடித்தவுடன், பச்சையம்மாள் போலிசில் புகார் கொடுத்திருந்தார். அதன்பின் ஒன்று இரண்டு மாதங்கள் கழித்து, எனது அண்ணனின் மற்றொரு மகள் வந்து, என் அண்ணன் மகள் பச்சையம்மாளைக் காணவில்லை என்று சொன்னதால், நான் கீழவளவு போலிஸ் ஸ்டேசனுக்குப் போய் புகார் கொடுத்தேன். காவல் நிலையத்தில் SI அய்யா முன்பு ஒரு படித்தவர் இருந்தார். அவரிடம் இவ்வாறு சொல்லி காணாமல் போனதாக எழுதிக் கொடுத்தேன். அந்த புகார் அதசாஆ.1 ஆகும். அதில் எனது கையொப்பம் உள்ளது. அதன் பின் 1 ½ மாதம் கழித்து, எங்க போச்சு இந்த பிள்ளை என்று தேடிப் பார்த்தேன் அப்போது, விவசாயம் செய்து கொண்டிருந்த நபர்கள், ஜப்பான், சாமிக்கண்ணு, முருகேசன், சுரேஷ் என்ற பையன் ஆகிய 4 பேரும், என் அண்ணன் மகளை 6 மணிக்கு பைக்கில் ஏற்றிச்சென்றதாகச் சொன்னார்கள். சின்ன வண்டியில் கூட்டிச் சென்றார்கள். மேற்படி நபர்கள் 2 வண்டியில் வந்ததாகச் சொன்னார்கள். அவர்களிடம், எதற்காக கூட்டிப் போனார்கள் என்று கேட்டதற்கு, வக்கீல் வைத்து பணம் கொடுப்பதாகச் சொல்லி அழைத்துச் செல்வதாகச் அவர்களிடம் சொன்னதாக என்னிடம் சொன்னார்கள். இதன் பின் நான் வீட்டில் இருந்தேன். மறுபடியும் நான் கேள்விப்பட்ட விஷயங்களை SI யிடம் சென்று, இன்னென்னார்கள் என் அண்ணன் மகளை அழைத்துச்

சென்றதாகக் கேள்விப்பட்ட விஷயங்களைச் சொன்னேன். அதன்பின் சாமிக்கண்ணு என்ற நபரை பிடித்திருப்பதாகச் சொன்னார்கள். என் அண்ணன் மகளை வெட்டிக் கொன்னுபுட்டார்கள். பிட்டர் கண்ணன், சாமிக்கண்ணு, சுரேஷ், ஜப்பான் இந்த நபர்கள் எல்லாம் சேர்ந்து வெட்டிக் கொன்றுவிட்டதாகக் கேள்விப்பட்டேன். என் அண்ணன் மகளின் பிரேதத்தை கட்டானிப்பட்டியில் ஆத்துககாலுக்குப் பக்கத்தில் தெற்குப் பக்கத்தில் பார்த்தேன். பாதி அழுகிய நிலையில் பிரேதம் இருந்தது. என் மகள் கையில் பச்சை குத்தியிருந்தது. அதை வைத்து என் அண்ணன் மகள் என்று அடையாளம் காண்பித்தேன். அதன் பின் தொண்டி எடுத்துப் போட்டார்கள். அதன் பின் அங்கேயே அடக்கம் பண்ணிவிட்டார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்) :</u>**

நான் ஆயத்தம்பட்டி வளையபட்டியில் திருமணம் செய்துள்ளேன். எனக்கு திருமணம் நடந்த வருடம் ஞபாகம் இல்லை. எனக்கு திருமணமாகி 40, 50 வருடங்கள் ஆகியிருக்குமா என்றால் இருக்கும். தற்போது எனக்கு 75 வயதாகிவிட்டது. 4,5 பிள்ளைகள் ஆகிவிட்டது. எனக்கு திருமணமாகியவுடன் எனது மனைவி ஊரிலேயே தங்கிவிட்டேனா என்றால் இல்லை. எனக்கு 3 வது குழந்தை பிறந்ததில் இருந்து, நான் மனைவி ஊரில் தான் வசித்து வருகிறேன். எனது 3 வது குழந்தைக்கு 30 , 35 வயது இருக்கும். நான் என் மனைவி ஊரில், காடு வாங்கி விவசாயம் செய்கிறேன் என்றால் சரிதான். நான் என் மனைவி ஊரில் வசித்து வந்த சமயத்தில் நான் வெளிநாட்டிற்கும் வேலைக்குச்

சென்று வந்தேன் என்றால் சரிதான். நான் எனது மனைவி ஊரில் வசித்து வந்ததால், என் அண்ணன் வசித்து வந்த சருகுவளையபட்டி ஊரில் என்ன நடக்கிறது என்ற விபரங்கள் எனக்குத் தெரியாது என்றால் சரியல்ல. சருகுவளையபட்டி என்பது பெரிய கிராமம் என்றால் சரிதான். சருகுவளையபட்டி 8 பகுதிகளை உள்ளடக்கியது என்றால் சரிதான். ஒத்தப்பட்டி என்பது சருகுவளையபட்டியின் ஒரு பகுதி என்றால் சரிதான். அண்ணாநகர் என்பது சருகுவளையபட்டியின் ஒரு பகுதி என்றால் சரிதான். மெய்யப்பன்பட்டி என்பது சருகுவளையபட்டியின் ஒரு பகுதி என்றால் சரிதான். சுப்பிரமணியபுரம் என்பதும் சருகுவளையபட்டியின் ஒரு பகுதி மேற்குவளவு, கிழக்குவளவு, அரியூர்பட்டி ஆகிய அனைத்து பகுதியும் சேர்ந்ததது தான் சருகுவளையபட்டி என்றால் சரிதான். அதில் அரியூர்பட்டியில் 900 குடும்பத்திற்கு மேல் இருக்கும் என்றால் சரிதான். மேற்சொன்ன பகுதிகளுக்கு ½, ½ கிமீ தூரம் இருக்கும் என்றால் சரிதான். எனக்கு திருமணம் ஆவதற்கு முன்பு, என் அண்ணன், என் அண்ணன் மகள், நானும் என் குடும்பத்தாரும் சுப்பிரமணியபுரத்தில் தான் வசித்து வந்தோம் என்றால் சரிதான். ஆரம்பத்தில் ஒன்றாகத்தான் இருந்தோம். பின்னர் எனக்குத் திருமணமாகி நான் வெளிநாட்டிற்குப் போய் வந்து, 10 ஆண்டுகள் கழித்து, பிறகு தான் ஆயத்தம்பட்டிக்குச் சென்றுவிட்டேன். என் அண்ணன் மகள் காணாமல் போன போது நான் ஆயத்தம்பட்டியில் தான் இருந்தேன். எனது அண்ணன் மகள் திருமணத்திற்கு நான் போகவில்லை என்றால் சரிதான். எனது அண்ணன் வெள்ளைக்கண்ணு 1998 ம் ஆண்டு இறந்தார் என்றால் எனக்கு

ஞாபகம்இல்லை. என் அண்ணன் இறந்தபின்னர், அவரது வீட்டில் என்ன நடக்கிறது என்ற விபரம் மற்றும் போக்குவரத்துகள் இல்லை என்றால் சரியல்ல. நான் வெளிநாடு சென்றிருந்த சமயத்தில், என் அண்ணன் மகள் ஆண்களுடன் கள்ளத் தொடர்பாக பழகி வருவதாக ஊரில் பஞ்சாயத்து நடந்தது என்றும் அந்த விபரம் பற்றி எனக்குத் தெரியும் என்றால் சரிதான். எங்கள் ஊரில் முக்கியஸ்தர்கள், அம்பலகாரர்கள் உள்ளார்கள் என்றால் சரிதான். 1 வது எதிரி வெளிநாட்டில் இருந்த காலகட்டத்தில், என் அண்ணன் மகள் தவறுதலாகப் போன விஷயம், பஞ்சாயத்தாகி, 1 வது எதிரி வரும் வரை என் மகளை கண்டித்துவைக்குமாறு முக்கியஸ்தர்களிடம் சொன்னேன் என்றால் சரியல்ல. 1 வது எதிரியின் அம்மாவையும், அப்பாவையும் கண்டித்து வைக்கச் சொன்னேன். 1 வது எதிரி வெளிநாட்டில் இருக்கும் கால கட்டத்தில், என் அண்ணன் மகள், பல ஆண்களுடன் தொடர்பாக இருந்தார் என்றும் அதன் அடிப்படையில் எங்கள் ஊர் நாட்டுப் பஞ்சாயத்து நடந்தது என்றும் அதில் என் அண்ணன் மகள் அதிகாரபூர்வமாக எழுதிக் கொடுத்து, தீர்த்துக் கொண்டோம் என்றால் சரியல்ல. அந்த ஆவணத்தில் நோட்டரி வழக்கறிஞர் முன்னிலையில் என் அண்ணன் மகளும், சாட்சிகளும் கையெழுத்திட்டார்கள் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. எனக்குத் திருமணமாகி, என் மனைவி ஊருக்குச் சென்றபின்னர், சருகுவளையபட்டியில் உள்ள சொத்துகள் பற்றி எனக்கு எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. அதனால் தான் எனக்கு அந்த ஊரில் பஞ்சாயத்து நடந்தது என்ற எந்த விபரமும் தெரியவில்லை என்று

சொன்னால் சரியல்ல. 1 வது எதிரியின் பெற்றோர்களை கண்டிக்குமாறு அம்பலகாரர்களிடம் சொல்லவில்லை என்றால் சரியல்ல. சருகுவளையபட்டியில் உள்ள பூர்வீக சொத்துக்களை விற்றுவிட்டு தான் எனது மனைவி ஊருக்குச் சென்றேன் என்றால் சரியல்ல. எனது அண்ணன் மகள், 2004 ம் ஆண்டு முதல் தனியாக எங்கு இருந்தார் என்ற யாருக்கும் தெரியாது என்றால் சரியல்ல. என் அண்ணன் மகள் பச்சையம்மாள் பஞ்சாயத்தில் ஆவணம் எழுதிக்கொடுத்த பின்னர் ஊருக்கு எப்போது வருவார் போவார் என்று எனக்குத் தெரியாது என்றும் ஆஜர் எதிரிகள்மீது உள்ள முன்விரோதம் காரணமாக அவர்களுக்கு எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் அண்ணன் மகள் காணாமல் போன விபரம் பற்றி என் மற்றொரு அண்ணன் மகளான பச்சையம்மாளின் தங்கை பாய் என்ற நித்தியா சொன்னார். அதன் பின்னர் நானும் நித்யாவும் கீழவளவு காவல் நிலையம் சென்றோம் என்றால் சரியல்ல. நான் மட்டும் தான் போனேன். காவல்நிலையத்தில் என் அண்ணன் மகள் காணவில்லை என்ற விபரத்தைச் சொன்னேன் என்றால் சரிதான். நான் SI இடம் சொன்னதை அவர் எழுதிக் கொண்டு அவர் என்னிடம் கையொப்பம் வாங்கினார் என்றால் ஆமாம். புகார் கொடுத்த பிறகு, சுமார் 2, 2 ½ மாதங்கள் கழித்து இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள். நான் புகார் அளித்த பிறகு, நான் காவல் நிலையத்திற்கு விசாரணைக்குப் போன போது, 1 வது எதிரியை கீழவளவு காவல் நிலையத்தில் வைத்திருந்தார்கள். அதன் பிறகு 2,3 நாட்கள் கழித்து மேலூர் காவல்நிலையத்திற்கு கொண்டுவந்தார்கள். நான் புகார் கொடுக்கும்

போதோ, இந்த வழக்கில் என்னை போலிசார் விசாரணை செய்த போதோ நித்யா சொல்லித்தான் பச்சையம்மாள் காணாமல் போன விபரம் தெரியும் என்று சொல்லவில்லை. நான் புகாரிலும், போலிசார் விசாரணையின் போதும், வழக்கு சம்பவத்திற்கு 2,3 ஆண்டுகளுக்கு முன்பு, என் அண்ணன் மகளான தமிழ் என்ற பச்சையம்மாளை சாமிக்கண்ணுக்கு திருமணம் செய்து கொடுத்தோம் என்றும் திருமணமாகி 2 வருடங்கள் கழித்து சாமிக்கண்ணு வெளிநாடு போகவேண்டும் என்று, பணம் கேட்டார்கள் என்றும் நானும் என் அண்ணனும் சேர்ந்து எங்கள் இடத்தை வித்துக் கொடுத்து அவர் வெளிநாடு போனார் என்றும் 2 வருடம் கழித்து என் அண்ணன் மகளை அவரது மாமியாரும், மாமனாரும் அவளை இருக்கவிடாமல் தொந்தரவு பண்ணியதாகச் சொன்னார் என்றும் அவரிடம், வெளிநாடு போனவர் வரட்டும், பேசிக்கொள்ளலாம் என்று சமாதானப் படுத்தினோம் என்றும் அவர்கள் கொடுமை தாங்காமல் என் அண்ணன் மகள், என் அண்ணன் வீட்டில் தான் இருந்து வந்தார் என்றும் சாமிக்கண்ணு வெளிநாடு போய்விட்டு வந்து, ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார் என்றும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. 1 வது எதிரி அவ்வாறு திருமணம் எதுவும் செய்யவில்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1 வது எதிரி வேறு திருமணம் செய்தது சம்பந்தமாக என் அண்ணன் மகள் காவல்நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. புகார் அளித்தபின்னர் 1 ½ மாதம் கழித்து, எங்க போச்சு இந்த பிள்ளை என்று தேடிப் பார்த்தேன்

எப்போதும் அப்போது, விவசாயம் செய்து கொண்டிருந்த நபர்கள், ஜப்பான், சாமிக்கண்ணு, முருகேசன், சுரேஷ் என்ற பையன் ஆகிய 4 பேரும், என் அண்ணன் மகளை 6 மணிக்கு பைக்கில் ஏற்றிச்சென்றதாகச் சொன்னார்கள் என்றும் மறுபடியும் நான் கேள்விப்பட்ட விஷயங்களை SI யிடம் சென்று, இன்னென்னார்கள் என் அண்ணன் மகளை அழைத்துச் சென்றதாகக் கேள்விப்பட்ட விஷயங்களைச் சொன்னேன் என்றும் பிட்டர் கண்ணன், சாமிக்கண்ணு, சுரேஷ், ஜப்பான் இந்த நபர்கள் எல்லாம் சேர்ந்து வெட்டிக் கொன்றுவிட்டதாகக் கேள்விப்பட்டேன் என்று புகாரில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. என் அண்ணன் மகள் எப்போது காணாமல் போனார் என்ற விபரம் பற்றி யாருக்கும் தெரியாது என்றால் சரியல்ல. நான் உயர்நீதிமன்றத்தில் என் மகளைக் காணவில்லை என்று ஒரு வழக்கு போட்டேன் என்றால் சரிதான். அந்த வழக்கு போட்ட பிறகு, அழுத்தத்தின் காரணமாக, என்னிடம், ஒன்றும் எழுதாத வெள்ளைத்தாளில் கையொப்பம் மட்டும் பெற்றுக் கொண்டு, வழக்கிற்கு ஏற்றாற்போல், பின்னிட்டு புகார் மனு தட்டச்சு செய்யப்பட்டு, தயார்செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கின் 2,3 எதிரிகளை எனக்கு எப்போதும் எதிரியாது என்றால் சரியல்ல. என் அண்ணன் மகள் திருமணமாகிய உடனேயே பிரச்சனை ஏற்பட்டு, அவர் தனியாகத்தான் குடியிருந்தார் என்றும் 5,6 எதிரிகளுடன் எந்த காலத்திலும் குடியிருக்கவில்லை என்றால் சரியல்ல. 5,6 எதிரிகள் எந்த காலத்திலும் என் அண்ணன் மகளைக் கொடுமைப்படுத்தவில்லை என்றால் சரியல்ல. என் அண்ணன் மகளை யார் கொன்றார்கள் என்ற

விபரம் போலிசாருக்குத் தெரியாது என்றும் நான் உயர்நீதிமன்றத்தில் போட்ட வழக்கின் அழுத்தத்தின் காரணமாக, 1 வது எதிரியை சட்ட விரோதமாக அடைத்துவைத்து, இவ்வழக்கில், மற்ற எதிரிகளையும் பொய்யாகச் சேர்த்து, வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை